TNED040041192025

Presented on : 15-07-2025
Registered on : 15-07-2025
Decided on : 10-03-2026
Duration : 0 years, 7 months, 26 days

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எண்.2, ஈரோடு.**
முன்னிலை : **திரு.செ.ராஜ்குமார், பி.ஏ., பி.எல்.,**
நீதித்துறை நடுவர் எண்.2, ஈரோடு.

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 10–ம் நாள் செவ்வாய்கிழமை

**சுருக்கு வழக்கு எண்.1156/2025**
**CNR.No. TNED040041192025**

State of Tamil Nadu Represented by
Drugs Inspector, Erode I range,
Office of the Assistant Director of Drugs Control
Erode Zone,
Moolapalayam, Erode – 638002. : குற்றமுறையிடுபவர்

/எதிர்/

Thiru.Vadivel E R, Proprietor,
M/s. Myura Surgical Pharrma,
Situated at 34–Thangaperumal street,
Erode – 638001. : எதிரி

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஈரோடு நீதிமன்றத்தில் 15.07.2025ஆம் தேதி STC No.1156/2025 என்ற எண்ணாக கோப்பில் எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 10.03.2026–ம்



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:31:14 +0530

தேதியன்று வந்தபோது அரசு தரப்பில் திருமதி.S.இளவேனில் M.A.,M.L., அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.T.ஈஸ்வரமூர்த்தி M.B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 25.03.2024ம் தேதி, Proprietor of M/s.Myura Surgical Pharrma, 34– Thangaperumal street, Erode– 638001என்ற விலாசத்தில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தை ஈரோடு முதல் நிலை மருந்து ஆய்வாளர் அவர்கள் ஆய்வு செய்தபோது மேற்படி நிறுவனத்தின் உரிமையாளரான வடிவேல் என்பவர் மருந்துகளை விற்பனை இரசீது இல்லாமல் விற்றுள்ளதாகவும், மேற்படி நிறுவனம் மூலம் ரொக்கம்/கிரெடிட் மெமோ இல்லாமல் மருந்துகள் விற்கப்பட்டுள்ளதாகவும் Section 18(C) of Drugs and Cosmetics Act 1940 u/s 27 (d) Drugs and Cosmetics Act 1940(2 counts)–ன் படி மருந்துகள் ஆய்வாளர், ஈரோடு மாவட்டம் அவர்களால் தனிக்குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது Section 18(C) of Drugs and Cosmetics Act 1940 u/s 27 (d) Drugs and Cosmetics Act 1940(2 counts)ன் படி வழக்கு கோப்புக்கு எடுக்கப் போதிய ஆதாரங்கள் இருக்கிறது என்று கருதியமையால் எதிரி மீது Section 18(C) of Drugs and Cosmetics Act 1940 u/s 27 (d) Drugs and Cosmetics Act 1940(2 counts)–ன் படி வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பு சார்பு செய்யப்பட்டு எதிரி



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:31:20 +0530

இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207 ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டது. நல்களை பெற்றுக்கொண்ட எதிரி குற்றவாளி என குற்றத்தை தம்மிச்சையாக ஒப்புகொண்டார். எதிரி குற்றத்தை ஒத்துகொண்டு குற்ற ஒப்புதல் மனுவும் தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரியின் தம்மிச்சையான குற்ற ஒப்புதலை ஏற்றும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலும், Section 18(C) of Drugs and Cosmetics Act 1940 u/s 27 (d) Drugs and Cosmetics Act 1940(2 counts) ன்கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்தது.

4. முடிவாக எதிரி Section 18(C) of Drugs and Cosmetics Act 1940 u/s 27 (d) Drugs and Cosmetics Act 1940 (2 counts)-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்து, எதிரியின் வேண்டு கோளையும், வழக்கின் தன்மையையும், எதிரியின் வயது, எதிரி முதல் குற்றவாளி என்பதால் எதிரி சந்தர்ப்பம் சூழ்நிலையின் காரணமாக தவறு செய்துவிட்டதாக தெரிவித்ததின் அடிப்படையிலும், திருந்துவதற்கான வாய்ப்பு அளிக்கும் பொருட்டும் மற்றும் அவரது குடும்ப சூழ்நிலையையும், எதிரிக்கு சமூகத்தில் திருந்தி வாழ்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டும் கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் Section 18(C) of Drugs and Cosmetics Act 1940 u/s 27 (d) Drugs and Cosmetics Act 1940(2 counts)ன் கீழான குற்றத்திற்கு ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் அபராதம் ரூ.20,000/-ம்



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:31:26 +0530

விதித்தும், அபராதம் கட்ட தவறினால் 1மாத காலம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும் நீதிமன்றம் கலையும் வரை ஒரு நாள் தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராதத் தொகை ரூ.40,000/-.

5. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்து என்னால் திருத்தப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.10 18:31:31 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
ஈரோடு.

<u>இணைப்பு:</u>
<u>அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள்</u> – இல்லை –

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:-</u> – இல்லை –

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.10 18:31:37 +0530

நீதித்துறை நடுவர் எண். 2,
ஈரோடு.

<u>குறிப்பு:</u>

1. மொத்த அபராதத் தொகை ரூ.40,000/-ம் எதிரி செலுத்திவிட்டார்.